*2018 ஜூன் 14*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**198**—

## கால்நடை கிளை நிலையம்

***19873—திரு. கே.எஸ். மூர்த்தி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமத்தி வேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கொண்டரசம்பாளையத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தொகுதி, சித்தம்புண்டி ஊராட்சி, கொண்டரசம்பாளையத்தில் 3,000—க்கும் அதிகமாக 3,075 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொண்டரசம்பாளையத்திற்கு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைக்கப்படும் என்று சொல்லிவிட்டார். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

**திரு. கே.எஸ். மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை வரவேற்கிறேன். ஆனால், இந்த இடத்தில், இந்த ஆண்டே, கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் வேண்டுமென்று சொல்லியிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற கொண்டரசம்பாளையத்தில் ஏற்கெனவே, 3,000–க்கும் அதிகமாக 3,075 கால்நடை அலகுகள் உள்ள காரணத்தினால், இந்த ஆண்டே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கருத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சென்று, கால்நடை கிளை நிலையம் அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்து விடுங்கள்.*

**திரு. கே.எஸ். மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விதிமுறைகளுக்குட்பட்டு, 3,000 கால்நடை அலகுகளுக்கு மேலும், 3 கி.மீ. தொலைவும் உள்ள பரமத்தி ஒன்றியம், மணியனூர் ஊராட்சி, மணியனூரிலும்; கபிலர் மலை ஒன்றியம், வடகரையாத்தூர் ஊராட்சி, வடகரையாத்தூரிலும் புதியதாக கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதையும், கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கால்நடை கிளை நிலையங்களுக்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டுவதற்கு நிதி வழங்கப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

*2018 ஜூன் 14*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட, நாகிரெட்டிப்பட்டி, பொம்மம்பட்டி மற்றும் வேள்விக்குடி ஆகிய இடங்களில் அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2008–ன்படி, கால்நடை கிளை நிலையங்கள் ரூபாய் 8 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கால்நடை கிளை நிலையங்களை, துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் அங்கேயும் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**199**—

## முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை

***13039—திரு. சபா. ராசேந்திரன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*